பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

15.08.2025 FRIDAY 7 15 AM

ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் 79வது சுதந்திர தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தில்லி செங்கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார்.

2. ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் மூலம் இந்தியாவின் வலிமையை உலக நாடுகள் உணர்ந்துள்ளதாக பிரதமர் கூறியுள்ளார்.

3. விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் வழங்கப்படுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

4. அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்பும் ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புடினும் அலாஸ்காவில் இன்று சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர்.

5. ஜெருசலேம் கிராண்ட்ஸ்லாம் தடகள போட்டியில், இந்தியாவின் Ankita Dhyani தங்கப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<<

நாட்டின் 79வது சுதந்திர தினம் இன்று கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, தில்லி செங்கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

(சவுண்ட் பைட் – மியூசிக் 60 செகண்ட்ஸ்)

அதனைத் தொடர்ந்து உரையாற்றிய அவர் நாட்டு மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

மகாத்மா காந்தியின் கொள்கைகளைப் பின்பற்றி நாடு முன்னேறி வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

நாட்டின் சுதந்திரம் மற்றும் அரசியலமைப்பு சாசன உருவாக்கத்தில் மகளிர் முக்கியப் பங்கு வகித்தாகவும் அவர்களுக்கு தலைவணங்குவதாகவும் பிரதமர் கூறினார்.

நமது அரசியல் சாசனம், கலங்கரை விளக்கமாக நம்மை வழிநடத்தி வருகிறது என்றார்.

140 கோடி மக்களின் உறுதிப்பாட்டிற்கான திருவிழாவாக சுதந்திர தினம் திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் திறம்பட செயலாற்றிய பாதுகாப்புப் படை வீரர்களுக்கு தலைவணங்குவதாக கூறிய அவர், ஆபரேஷன் சிந்தூர்

நடவடிக்கையின்போது முப்படைகளுக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் மூலம் இந்தியாவின் வலிமையை உலக நாடுகள் உணர்ந்துள்ளதாக அவர் கூறினார்.

அணு ஆயுத அச்சுறுத்தல்களுக்கு இந்தியா அடிபணியாது என்றும் அவர் உறுதிபட தெரிவித்தார்.

தீவிரவாதிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிப்பவர்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

சிந்து நதியின் முழு உரிமை இந்தியாவுக்குத் தான் உள்ளதாகவும், சிந்து நதிநீர் ஒப்பந்தம் ஒருதலைபட்சமானது என்பதை நாட்டு மக்கள் தெளிவாக புரிந்து கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு, இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு துணைநிற்பதாகவும், மத்திய மாநில அரசுகள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் இணைந்து செயல்பட்டு வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

வேளாண் உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ள பிரதமர், இந்திய உற்பத்திப் பொருட்களுக்கான மதிப்பு அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

அனைத்துத் துறைகளிலும் சுயசார்பு அவசியம் என்றும், இதற்கு சிறந்த உதாரணமாக ஆபரேஷன் சிந்தூர் திகழ்வதாகவும் அவர் கூறினார்.

இளையோர் நலனுக்காக, இன்று தொடங்கப்படும் பிரதமரின் வளர்ச்சியடைந்த இந்தியா வேலைவாய்ப்புத் திட்டம் வாயிலாக, 3 புள்ளி ஐந்து கோடி பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் பிரதமர் உறுதியளித்தார்.

4 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு வேளாண் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், வேளாண் உற்பத்தியில் பின்தங்கிய 100 மாவட்டங்கள் கண்டறியப்பட்டு, விவசாயிகளுக்கு உதவும் வகையில் பிரதமரின் தனதானிய இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

சூரியசக்தி உற்பத்தியில் இந்தியா முன்னேற்றம் அடைந்து வருவதாகவும், அணுமின் உற்பத்தியிலும் இந்தியா குறிப்பிடத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மின்சார வாகன உற்பத்தி மற்றும் அதற்கான பேட்டரி உற்பத்தி போன்றவற்றில் இந்தியா வேகமாக வளர்ச்சி அடைந்து வருவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

பொருளாதார வளர்ச்சியில் மகளிர் சுய உதவிக் குழுவினரின் பங்களிப்பு மிக முக்கியமானது என்றும், நாட்டில் 2 கோடி சகோதரிகள் லட்சாதிபதியாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரி வரிசீர்திருத்தங்களால் மக்களின் வரிச் சுமை பெருமளவு குறைந்துள்ளதாகவும், மேலும் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்தார்.

மாநில தலைநகரங்களில், அந்தந்த மாநில முதலமைச்சர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினர்.

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், தேசியக்கொடியை ஏற்றி வைத்து, உரையாற்றினார்.

>>>>>>><<<<<<<

அனைத்து துறைகளிலும் வளர்ச்சியடைந்த, தன்னிறைவு பெற்ற நாடாக இந்தியா திகழ்வதற்கான பங்களிப்பை, நாட்டு மக்கள் அனைவரும் வழங்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் நாட்டு மக்களுக்கு சுதந்திர தின வாழ்த்துகளை தெரிவித்துள்ள அவர், விடுதலைக்காக பாடுபட்ட வீரர்களின் தியாகத்தை நினைவுகூருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பில் அயராது பணியாற்றி வரும், பாதுகாப்புப் படை வீரர்களுக்கு தலைவணங்குவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் வழங்கப்படுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்

புதுதில்லியில் மாநில வேளாண் அமைச்சர்களுடன், காணொலி மூலம் நேற்று அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

கூடுதலாக யூரியா உரங்கள் தேவைப்பட்டால், அதை பூர்த்தி செய்ய உரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கம், ரபி பருவத்தில் அக்டோபர் 3ஆம் தேதி முதல் 18ஆம் தேதிவரை நடத்தப்படும் என்றும், மாநில அரசுகள் இதனை தீவிரமாக செயல்படுத்தி அரசின் திட்டப் பயன்கள் விவசாயிகளை சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தினார்.

>>>>>>><<<<<<

ஜம்மு கஷ்மீரில். கிஷ்துவார் மாவட்டத்தில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கைத் தொடர்ந்து, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்துள்ளது.

167 பேர் மீட்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிலைமையை மத்திய அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாகவும். மீட்புப் பணிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

அமெரிக்க அதிபர் திரு டோனல்ட் ட்ரம்ப்பும், ரஷ்ய அதிபர் திரு விளாதிமிர் புடினும் அலாஸ்காவில் இன்று சந்தித்துப் பேச்சு நடத்துகின்றனர்

யுக்ரைன் விவகாரம் தொடர்பாக அவர்கள் இருவரும் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

இந்த பேச்சுவார்த்தைக்குப் பின்னர், ரஷ்யா – யுக்ரைன் இடையே போர் நிறுத்தம் ஏற்படும் என்று திரு. டோனல்ட் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

திரு. ட்ரம்ப் உடனான சந்திப்பின் போது, அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே அணுஆயுத கட்டுப்பாடு குறித்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட வாய்ப்புள்ளதாக திரு. விளாடிமிர் புட்டின் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<

ஐரோப்பாவின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக கடும் சேதம் ஏற்பட்டுள்ளது.

கிரீஸ், பல்கேரியா, ஸ்பெயின், அல்பேனியா ஆகிய நாடுகளில் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது.

ஸ்பெயினில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பிரான்ஸ் ஹெலிகாப்டர்கள் தீயணைப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த காட்டுத் தீயால் 6 லட்சத்து 29 ஆயிரம் ஹெக்டேர் நிலம் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐரோப்பிய யனியன் தெரிவித்தள்ளது.

காட்டு தீ காரணமாக, ஸ்பெயின் உள்ளிட்ட ஐந்து நாடுகளில் இதுவரை 95 பேர் காயமடைந்துள்ளனர்.

>>>>>>><<<<<<<

ஜெருசலேம் கிராண்ட்ஸ்லாம் தடகள போட்டியில், இந்தியாவின் Ankita Dhyani தங்கப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியின் 2 ஆயிரம் மீட்டர் Steeplechase பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>>><<<<<<<

ஆசிய இளையோர் கராத்தே சாம்பியன் போட்டியில், இந்தியாவின் Rayna Sinha வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>>><<<<<<<

மலேசிய சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Manraj Singh காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 7-15, 15-2, 15-7 என்ற செட்கணக்கில் மலேசியாவின் Ahmad Fairuzly-யை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Tasnim Mir-ம் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Anahat Singh காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 11-3. 11-3. 11-4 என்ற செட்கணக்கில் ஆஸ்திரேலியாவின் Sarah Cardwell-ஐ வென்றார்.

>>>>>>>END<<<<<<<